பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**17 04 2026 FRIDAY 7.15 PM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

**1.** மகளிர் இடஒதுக்கீட்டிற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மறைமுகமாக எதிர்ப்பு தெரிவிப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குறை கூறியுள்ளார்.

**2.** விவசாயிகள் நலனில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

**3.** மேற்குவங்கம் மற்றும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

**4.** ஈரான் உடனான மோதலுக்கு விரைவில் தீர்வுகாணப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

**5.** ஆசிய ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Inunganbi Takhellambam** வெண்கலப்பதக்கம் வென்றார்.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

மகளிர் இடஒதுக்கீட்டிற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மறைமுகமாக எதிர்ப்பு தெரிவிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குறை கூறியுள்ளார்.

மக்களவையில் மகளிர் இடஒதுக்கீடு தொடர்பான மசோதாக்கள் மீதான விவாதத்திற்கு தற்போது அவர் பதிலளித்து பேசி வருகிறார்.

இடஒதுக்கீட்டிற்கு ஆதரவு அளிப்பதாக கூறும் எதிர்க்கட்சிகள், சில பல காரணங்களை கூறி மறைமுகமாக எதிர்ப்பு தெரிவிப்பதாக அவர் கூறினார்.

இந்த மசோதாக்கள் நிறைவேற அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

அமைச்சரின் பதிலுரைக்கு பின்னர் மசோதாக்கள் மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

விவசாயிகள் நலனில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தம்மை சந்தித்த மத்தியப்பிரதேச விவசாய குழுவினருடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று அவர் கூறினார்.

தரமற்ற விதைகள் பயன்பாடு காரணமாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

<<<<<<<>>>>>>

ஆயுஷ் துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆயுஷ் துறையின் செயல்பாடுகள் தொடர்பாக கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

ஆயுஷ் சிகிச்சை முறைகளுக்கும் காப்பீட்டு வசதியை விரிவுபடுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

ஆயுஷ் துறையின் வசதிகளை மக்கள் உடனுக்குடன் அறிந்துகொள்வதற்கு ஏதுவாக வாட்ஸ்அப் சேனல் தொடங்கப்பட்டிருப்பதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறினார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் சீராக நடைபெற்று வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச்செயலர் திருமதி சுஜாதா சர்மா, நேற்று மட்டும் **50** லட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

**98** சதவீத முன்பதிவு இணையதளம் வாயிலாக மேற்கொள்ளப்படுவுதாகவும் அவர் கூறினார்.

வர்த்தக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விநியோகமும் **70** சதவீதமாக உள்ளது என்று திருமதி சுஜாதா சர்மா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

ராஜஸ்தான் சட்டப்பேரவையின் நடைமுறைகளை 17 நாடுகளை சேர்ந்த 43-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் நாளை பார்வையிட உள்ளதாக பேரவைத் தலைவர் திரு Vasudev Devnani கூறியுள்ளார்.

இன்று ஜெய்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பங்களாதேஷ், பூட்டான், கென்யா, இலங்கை, ஜாம்பியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இதில் அடங்குவார்கள் என்று தெரிவித்தார்.

ராஜஸ்தான் சட்டப்பேரவையின் செயல்பாடுகள் குறித்து இப்பிரதிநிதிகளிடம விரிவாக எடுத்துரைக்கப்பட உள்ளதாகவும் திரு Vasudev Devnani கூறினார்.

<<<<<<<>>>>>>

ஜார்கண்டில் நான்கு நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

Hazaribag பகுதியில் பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நேரிட்டதாகவும், இதில் நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் வால்பாறை அருகே நேரிட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். எட்டு பேர் காயமடைந்தனர்.

கேரளாவை சேர்ந்த 16 பேர் வால்பாறைக்கு வேனில் சுற்றுலா சென்றுவிட்டு திரும்பும்போது மலைப்பாதையில் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த இந்த வேன் பள்ளத்தில் விழுந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

கர்நாடகாவில் நேரிட்ட சாலை விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

**Surpur** தாலுக்காவுக்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த கார், பேருந்து மீது மோதியதில் தீப்பிடித்து எரிந்ததாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது தென்காசி மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 180 mins.)*

<<<<<<<>>>>>>

தமிழகம் மற்றும் மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இவ்விரு மாநிலங்களிலும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறக்கும் படையினர் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மேற்குவங்கத்தில் இதுவரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 427 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை **438** கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய ஆவணங்களை சமர்ப்பித்தால் பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் திருப்பி வழங்கப்படுவதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பான, புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்ட அளவில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் குறித்த புகார்களை அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் **ECINET** செயலியில் தெரிவிக்கலாம் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

ஈரான் உடனான மோதலுக்கு விரைவில் தீர்வுகாணப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இரு நாடுகளுக்கு இடையேயான சண்டை நிறுத்த ஒப்பந்தம் அடுத்த வாரம் நிறைவடைய உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது நீட்டிக்கப்பட வாய்ப்புள்ளதாக கூறியுள்ள அவர், அதற்கு தேவை இருக்காது என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Inunganbi Takhellambam** வெண்கலப்பதக்கம் வென்றார்.

சீனாவின் **Ordos**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 70 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<<<**END**>>>>>>